உ

சிவமயம்



# திருவாசக பூசாவிதி



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

செய்தது

1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருவாசக பூசாவிதி



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

செய்தது

வெளியிட்டவர்:

சிவதர்ம வள்ளல், மில்க்வைற் தொழிலதிபர்

சமாதான நீதவான் க. கனகராசா

திருஆலவாய்

யாழ்ப்பாணம்.

1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சிவபூசை செய்வோர் உடையவரை எழுந்தருளச் செய்து பூசை செய்யும் முறையில், மாணிக்கவாசக சுவாமிகள் செய்தருளிய திருவாசகம் என்னும் திருமுறையையும் எழுந்தருளச் செய்து பூசை செய்யும் முறைபற்றி முன்னரே நாவலர் அவர்கள் செய்துள்ளார். அருமருந்தன்ன பத்ததி போன்ற இந்நூலை, நாவலர் அவர்களுக்குப் பின், அவர் தம் ஞானபரம்பரையில் வந்த கந்தமடவூர் சித்தாந்தச் செம்மலும் திருமுறை வித்தகருமான சுவாமிநாத பண்டிதர் அவர்கள் 1907–ஆம் ஆண்டிலும் 1911–ஆம் ஆண்டிலும் அச்சிட்டு வெளியிட்டார். அவருக்குப் பின், சென்னை திருமயிலாப்பூர் சைவப் பெரியார் ஜெம்புலிங்கம்பிள்ளை அவர்கள், 1946-ஆம் ஆண்டில் சென்னையில் பதித்து வெளியிட்டார்கள். இவர் யாழ்ப்பாணத்துச் சைவக் கல்விப் பாரம் பரியத்தைத் தமிழ்நாட்டில் ஒளிகாலச் செய்த பெரியார்.

இந்நூல் இதுகாறும் கிடைத்தற்கரிய செம்பொருளாய் இருந்தபோது, இதனைத் தேடியெடுத்து வீடுதேடிக் கொண்டு வந்து எம்மிடம் கொடுத்த காரைநகர்ச் சிவன் கோயில் சிவத்திரு. க. வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்களுக்குச் சைவ உலகம் செய்யும் கைமாறு கிடையாது. இதனை மில்க்வைற் தொழிலதிபர் உச்சிமேற் கொண்டு போற்றி அச்சிற் பதித்து வெளியிடுகின்றார். இவர் வாழ்க. இவரின் பணி வாழ்க.

கந்தமடம்,
யாழ்ப்பாணம்.
25-8-84.

**க. சி. குலரத்தினம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருவாசக பூசாவிதி

## 1. பூசாரம்பம்

நீராடித் தோய்த்துலர்ந்த வஸ்திரமாயினும் பட்டாயினும் தரித்து, அனுட்டானம் முடித்துப் பூசைப் பாத்திரங்களையும் சந்தனக்கல்லையும் சந்தனக் கட்டையையும் "ஓம் அஸ்திராயபடு" என்று கழுவி எடுத்துக்கொள்க.

பூசைத் தானத்தைத் திருமெழுக்குக் கொண்டு, "ஓம் அஸ்திராயபடு" என்று தெளித்து, "ஓம் கவசாய வௌஷடு" என்று தடவிக் கைகழுவி, நடுவிலும் கிழக்கு முதல் எட்டுத் திக்கிலும் மீட்டும் நடுவிலும் "ஓம் இருதயாய நம" என்று பத்திரங் கிள்ளி வைக்க.

பூசைத்தானத்தின் நடுவே பீடத்தையும் அதற்குக் கிழக்கே ஒரு பத்திரத்தின் மேலே திருமஞ்சன பாத்திரத்தையும், பீடத்துக்குத் தெற்கே ஒரு பத்திரத்தின் மேல் அபிஷேக கலசத்தையும், அதற்கு மேற்கே ஒரு பத்திரத்தின் மேல் வட்டகையையும் வைத்து, அவைகளிலே "ஓம் இருதயாய நம" என்று பத்திரம் கிள்ளி வைத்து, பீடத்துக்கு மேற்கே பத்திர புட்பத்தட்டை வைத்துவிட்டுச் சந்தனம் இழைத்து அதன்மீது பத்திரங் கிள்ளி வைக்க.

பீடத்துக்குத் தெற்கே வடக்குமுகமாக இருந்து குட்டிக் கும்பிட்டுப் பிராணயாமமுஞ் சகளீகரமுஞ் செய்து, தன்னைச் சிவமாகப் பாவித்துக்கொண்டு கைகழுவிக் கொள்க.

## 2. அர்க்கியம்

வட்டகையை "ஓம் அஸ்திராயபடு" என்று கழுவிச் சல நிறைந்த அபிஷேக கலசத்தை இரண்டு கைகளினாலும் புருவ நடுவளவாக உயர்த்திக் கொண்டுபோய் அச்சலத்தை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புருவ நடுவாகிய விந்துத் தானத்தினின்று கிரகிக்கப்பட்ட அமிர்தமாகப் பாவித்து, அதனை இறக்கிக் கொண்டு வந்து, "ஓம் இருதயாய வௌஷடு" என்று அவ்வட்டகையிலே பூரித்து, அதிலே அம்மந்திரத்தினாற்றானே புஷ்பமும் சந்தனமும் இட்டு, "ஓம் நம" என்று ஏழுதரம் பூசித்து, அதனால் ஏழுதரம் அபிமந்திரித்து, "ஓம் அஸ்திராயபடு" என்று இரட்சையும், "ஓம் கவசாய வௌஷடு" என்று அவகுண்டனமுஞ் செய்து, "ஓம் சிவாயவௌஷடு" என்று தேனு முத்திரை கொடுக்க.

## 3. ஆத்துமஸ்தானத் திரவிய சுத்தி

அர்க்கிய சலத்தினாலே தனது தலையையும் பூசாத்தானத்தையும் பூசாத் திரவியங்களையும் "ஓம் அஸ்திராயபடு" என்று புரோக்ஷித்து, ஒரு புஷ்பத்தை அர்க்கிய கலசத்தில் தோய்த்து, திருமஞ்சன பாத்திரத்தினுள்ளே "ஓம் இருதயாய வௌஷடு" என்று இட்டு, "ஓம் சிவாய வௌஷடு" என்று தேனு முத்திரை கொடுக்க.

## 4. ஆத்தும பூசை

தனது ஆசனத்திலே "ஓம் சிவாசநாய நம" என்று புஷ்பமிட்டு, தனது மார்பிலே "ஓம் சிவ மூர்த்தயே நம" என்று புஷ்பமிட்டு, நெற்றியிலே சந்தன திலகமிட்டு, தலையிலே "ஓம் சிவாயநம" என்று புஷ்பமிட்டு, மௌனம் பொருந்தி,

## 5. மந்திரசுத்தி

பதினொரு மந்திரத்தையும் சிவமூல மந்திரத்தை உச்சரிக்க.

## 6. கணபதி பூசை

பீடத்தின் மீது பட்டை விரித்து, வாயு கோணத்திலே "ஓம் கணபதி யாசனாய நம", "ஓம் கணபதி மூர்த்தயே நம", "ஓம் கணபதயே நம" என்று பூசித்து, வட்டகையை எடுத்து இடக்கையில் வைத்து வலக்கையில் மிருகிமுத்திரையினாலே "ஓம் கணபதயே சுவாகா" என்று அர்க்கியங் கொடுத்து, சந்தனம் அறுகு அக்ஷதை புஷ்பஞ் சாத்துக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. சடுத்தாசன பூசை

நடுவே "ஓம் அநந்தாய நம" என்றும், தென்கிழக்கே "ஓம் தருமாய நம" என்றும், தென்மேற்கே "ஓம் ஞானாய நம" என்றும், வடமேற்கே "ஓம் வைராக்கியாய நம" என்றும், வடகிழக்கே "ஓம் ஐசுவரியாய நம" என்றும் பூசித்து, அதன்மீது திருமுறையைத் திருக்காப்பு நீக்கி வைக்க.

## 8. சிவாசன பூசை

திருமுறையின் கீழ்ப்பாகத்தில் "ஓம் சிவாசநாய நம" என்று பூமி முதல் குடிலை பரியந்தம் வியாபித்ததாகிய சிவாசனத்தைப் பூசித்து,

## 9. சிவமூர்த்தி நிவேசனம்

புட்பங்களால் அஞ்சலி நிறைத்து இருதயத் தானத்தில் வைத்துக் கொண்டு,

## 10. தியானம்

ஒருகோடி ரவியொளியு மொருமுக் கண்ணு
　　மோங்குமிளம் பிறைநதிசேர் சடையு மூன்றுந்
திருமேவு வலப்பதமுந் தூக்கு மற்றைத்
　　திருவடியும் புலியதளி னுடையுஞ் செய்ய
குருமேவு மக்கினிக்கை வீசு செங்கை
　　கோதில்ப யக்கைதம ருகக்கை நான்கும்
உருகார்வத் திடப் பாலிலி லுமையுமாக
　　வொளிருநட ராசனையா முன்னு வாமே.

என்று நடேசமூர்த்தியாகிய சிவமூர்த்தியைத் தியானித்துப் புட்பாஞ்சலியைப் புருவ நடுவளவாக உயர்த்திக் கொண்டுபோய், "ஓம் சிவமூர்தயே நம" என்று உச்சரித்து அச்சிவமூர்த்தியைத் தனது அஞ்சலியினுள் வந்ததாகப் பாவித்து இருதயத்தானமளவாக இறக்கிக்கொண்டுவந்து, திருமுறையின் மேலே நியசிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. நேத்திர நியாசம்

ஞானமும் கிரியையும் இச்சையுமாகிய நேத்திரத்தை நேத்திரங்களிலே நடுவிரல் மூன்றினுலும் நியசிக்க.

## 12. சிவஆவாகனம்

புட்பங்களால் அஞ்சலியை நிறைத்து, "ஓம் சிவாயநம" என்று உச்சரித்துப் புட்பாஞ்சலியைத் துவாத சாந்தபரியந் தம் உயர்த்திக் கொண்டுபோய் அங்குள்ள சிவபெருமானைத் தியானித்து, புருவ நடுவரையும் இலக்கி வல மூக்கினுலே புறப்பட்டு இருதயத்தில் இருத்திய புட்பாஞ்சலியுள் வந்தவ ராகப் பாவித்து, "ஓம் இருதயாய நம" என்று ஆவாகன மும், தாபனமும், சந்நிதானமும், சந்நிரோதனமும் செய்து வட்டகையை எடுத்து இடக்கையில் வைத்துக் கொண்டு வலக்கையில் மிருகி முத்திரையினுலே "ஓம் சிவாய சுவாகா" என்று அர்க்கியங் கொடுக்க.

## 13. இருதயாதி நியாசம்

இருதயம், சிரசு, சிகை, முலேநடு, உள்ளங்கை என்னும் ஐந்து இடங்களிலும் முறையே "ஓம் இருதயாய நம", "ஓம் சிரசே நம", "ஓம் சிகாயை நம", "ஓம் கௌசாயவௌஷடு", "ஓம் அஸ்திராயபடு" என்று நியசித்து, "ஓம் சிவாய வௌஷடு" என்று ஐக்கியமும், "ஓம் அஸ்தராயபடு" என்று இரக்ஷையும், "ஓம் கவசாய வௌஷடு" என்று அவகுண்டன மும் செய்து "ஓம் சிவாய வௌஷடு" என்று மகா முத் திரை கொடுக்க.

## 14. பாத்தியம், ஆசமனம், அர்க்கியம்

வட்டகையை எடுத்து இடக் கையில் வைத்துக்கொண்டு வலக்கையில் மிருகி முத்திரையினுலே "ஓம் சிவாய நம" என்று பாதங்களிலே இரண்டுதரம் பாத்தியமும், "ஓம் சிவாய சுவதா" என்று முகத்திலே மூன்றுதரம் ஆசமனமும், "ஓம் சிவாய சுவாகா" என்று சிரசிலே ஒரு தரம் அர்க்கிய முங் கொடுக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. புட்பதானம்

"ஓம் சிவாய வௌஷடு" என்று புட்பங்களும், அறுகும், அக்ஷதையும் சாத்துக.

## 16. பாவனுபிஷேகம்

சிறு விரல் அணி விரல்களின் நடுவிலே ஒரு புட்பமெடுத்துக் கொண்டு பெரு விரல் சுட்டு விரல்களினுலே திருமுறை மேலுள்ள புட்பங்களை "ஓம் அஸ்திராயபடு" என்று சுழித்து "ஓம் சிவாய நம" என்று புட்பத்தை மேலே சாத்தி, அபிஷேக சலத்தைக் கையிற் கொண்டு எண்ணெய்க் காப்பு முதலிய அபிஷேகத் திரவியங்களை மனசிலே பாவித்து, "ஓம் சிவாய சுவாகா" என்று புறம்பே பாவனுபிஷேகம் பண்ணி, அர்க்கிய சலத்திஞலே புரோக்ஷிக்க.

## 17. சந்தனுதி

சந்தனமும் அறுகும் அக்ஷதையும் புட்பங்களும் சாத்தி, வஸ்திரம், ஆபரணம் முதலியவை சாத்தியதாகப் பாவித்துப் புட்பஞ்சாத்துக.

## 18. புட்பாஞ்சலித்திரயம்

"ஓம் ஆத்தும தத்துவாதி பதயே சிவாய நம", "ஓம் வித்தியா தத்துவாதிபதயே சிவாய நம", "ஓம் சிவதத்துவாதிபதயே சிவாய நம" என்று மூன்று தரம் புட்பாஞ்சலி சாத்தி, "ஓம் சிவாய சுவாகா" என்று அர்க்கியங் கொடுக்க.

## 19. நைவேத்தியாதி

"ஓம் சிவாய சுவாகா" என்று தூபமுந் தீபமுங்காட்டி, "ஓம் சுவாய சுவதா" என்று மூன்று தரம் ஆசமனமும் "ஓம் சிவாய சுவாகா" என்று ஒரு தரம் அர்க்கியமும் கொடுத்து, நைவேத்தியத்தை "ஓம் அஸ்திராயபடு" என்று அர்க்கிய சலத்திஞலே புரோக்ஷித்து, நிரீக்ஷணம், புரோக்ஷணம், தாடனம், அப்தியுக்ஷணம் என்னும் நான்கும் செய்து சுத்தமாக்கிப் புட்பத்தோடு கூடிய மிருகி முத்திரையினுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் சிவாய நைவேத்தியம் சுவாகா" என்று நிவேதித்து, "ஓம் சிவாய பானீயம் சுவாகா" என்று பானீயங் கொடுத்து, முன்போல் ஆசமனமும் அர்க்கியமுங் கொடுத்து, "ஓம் சிவாய ஓம்" என்று புட்பாஞ்சலி சாத்தி, "ஓம் கவசாய சுவாகா" என்று கர்ப்பூர ஆலாத்தி பணிமாறப் பண்ணுக.

## 20. அர்ச்சனை

"ஓம் பவாய தேவாய நம", "ஓம் சர்வ தேவாய நம" "ஓம் ஈசானாய தேவாய நம", "ஓம் பசுபதயே தேவாய நம", "ஓம் ருத்ராய தேவாய நம", "ஓம் உக்கிராய தேவாய நம", "ஓம் பீமாய தேவாய நம", "ஓம் மகதோ தேவாய நம", "ஓம் சிவகாமசுந்தரீ சமேத ஸ்ரீ சிதம்பர நடேசுவராய சிவாய மந்திரபுஷ்பாணி சமர்ப்பயாமி" என்று அர்ச்சனை பண்ணுக.

## 21. செபநிவேதனம்

இடக்கையிலே ஒரு பத்திரத்திற் புட்பமெடுத்து வைத்துக் கொண்டு, சிவமூல மந்திரத்தை நூற்றெட்டுத் தரம் செபித்து, அதற்கு இரக்ஷையும் அவகுண்டனமுஞ் செய்து, அதனை வலக்கையிற் கிரகித்துக் கொண்டு, அர்க்கிய சலமுங் கூட்டி, உற்பவ முத்திரை கொண்டு "ஓம் இருதயாய சுவாகா" என்று சிவபெருமானுடைய வலக்கையிலே நிவேதித்துப் பின் செபித்த புட்பத்தைச் சாத்துக.

## 22. தோத்திராதி

அருட்பா ஐந்தினாலும் துதித்து, எழுந்து மூன்று தரம் ஆன்மப் பிரதக்ஷணமும் மூன்று தரம் நமஸ்காரமும் செய்து, இருந்து கைகழுவித் துடைத்துக் கொண்டு, திருமுறைமீதுள்ள புட்பங்களை இரு கைகளினாலும் எடுத்து இரு கண்களிலும் ஒற்றிக் கொண்டு, திருமுறையில் வேண்டும் பாகம் வாசித்து, "ஓம் சிவாய நம" என்று ஒரு புட்பஞ் சாத்தி, "ஓம் சிவாய சுவாகா" என்று அர்ச்சியங் கொடுத்துத் திருமுறையைத் திருக்காப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 23. அந்தகாரியம்

பின்பு நாராச முத்திரை கொண்டு "அஸ்திராயபடு" என்று புட்பந் தெளித்து, அர்க்கிய பாத்திரத்திலுள்ள மந்திரங்களை எழுப்பி, இருதயத்தில் ஒடுக்கி, நிருமாலியத்தைக் கழித்துப் பூமியைக் கோமயத்தினாலே தெளித்துத் தடவிவிடுக.

திருச்சிற்றம்பலம்

★

உ
சிவமயம்

# ஓதத்தகுந்த பஞ்ச புராணங்கள்

## தேவாரம்

சம்பந்தர் திருச்சிற்றம்பலம் பண்-கொல்லி

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## திருவாசகம்

மாணிக்கவாசகர்

காலம் உண்டாகவே காதல் செய்து உய்மின் கருதரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலம் உண்டானெங்கள் பாண்டிப் பிரான் தன்னடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

சேந்தனார் பண்-பஞ்சமம்

ஏகநாயகனை இமயவர்க்கு அரசை
 என்னுயிர்க்கு அமுதினை எதிரில்
போகநாயகனை புயல்வணர்க்கு அருளிப்
 பொன்நெடும் சிவிகையா யூர்ந்த
மேகநாயகனை மிகுதிரு வீழி
 மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனை அன்றிமற் றொன்றும்
 உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

சேந்தனார் பண்-பஞ்சமம்

சீரும் திருவும் பொலிய
 சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
 பெற்றது ஆர்பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற
 உழறி உமைமண வாளனுக்கு ஆள்
பாரும் விசும்பும் அறியும்
 பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

சேக்கிழார் விருத்தம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகி தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகமும் திருக்கோவையாரும் ஏறக்குறைய ஆயிரம் பாடல்களைக் கொண்டவை. அடியார் மனத்தை அமுதூறச் செய்பவை. தமிழ்நாட்டில் திருவாசகத்துக்குப் பெருவிழா வெடுத்து மாநாடு கூடிப் பேசிப் பரவுவர். பலர் பூசைப் பெட்டகங்களில் வைத்து நித்திய பூசை செய்து வணங்குவர். சிவபெருமான் திருவாசகத்தைக் கேட்டுருகி அதனைப் பாடியருளியவருக்கு மாணிக்கவாசகன் எனப் பெயரிட்டருளினர். திருவாசகம் மதுரவாசகம், மாணிக்கவாசகம். உடம்புக்குத் தேன்போல உள்ளத்துக்குத் திருவாசகமாதலால் திருவாசகம் என்னும்தேன் என்பர். மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனைத் தேனெனவும் பாடியருளுவர். திருவாசகத்தை வழிபாட்டு நூலாக வீட்டில் பூசிக்க வேண்டும் என்பது நாவலர் அவர்களின் கருத்தாகும்.

---

நல்லதையே செய்வோம்
எங்கள் சேவைக்கு
உங்கள் ஆதரவு தேவை.

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 23002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org